8th August 1966]

*225 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியம்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலுக்கா, புவனகிரி யூனியனைச் சேர்ந்த கொளக்குடி கிராமத்தில் நல்ல முறையில் நெல் விளையக்கூடிய பல நூற்றுக்காணக்கான ஏக்கர் நிலங்களை, புஞ்சை நிலங்களாக பாவித்து வரி விதிப்பதை நிறுத்தி, அதை நஞ்சை நிலங்களாக மாற்றுவது பற்றி அரசாங்கத்தின் பரிசிலனையில் உள்ளதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இல்லை.

குடி நீர்த் திட்டம்

*226 கேள்வி.—திரு. ம. கமலநாதன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கிருஷ்ணகிரி நகரத்திற்கு, கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லை.

திரு. ம. கமலநாதன் : கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து நீர் கொண்டு வரும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லி இன்வெஸ்டிகேஷன் ஃபீஸ் எல்லாம் வசூலித்து வந்தார்கள். ஆனால் இப்போது அமைச்சர் அவர்கள் ‘இல்லை’ என்று பதில் சொல்லுகிறார்கள். இதிலே எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : 1963-ம் ஆண்டிலே இன்வெஸ்டிகேட் செய்யப்பட்டு அதற்குத் தொகை 16.50 லட்சம் ரூபாய் செலவாகும் என்றும் 49,500 ரூபாய் மெயின்டினன்சுக்குச் செலவாகும் என்றும் திட்டமிடப்பட்டிருந்தது. அதன் பிறகு பஞ்சாயத்து கொடுக்கவேண்டிய தொகையைக் கொடுக்க இயலாது என்று தெரிவித்திருந்தார்கள். ஆகவே, இதைப் பஞ்சாயத்து முனிசிபாலிடியான பிறகு எடுத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட கடைசி ஆண்டில் எடுத்துக் கொள்ளவேண்டாம், அடுத்த திட்டத்தில் எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ம. கமலநாதன் : சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து இந்தத் திட்டத்திற்காக அரசாங்கத்தினிடம் கடன் கோரிற்று. அவர்கள் அந்தக் கடனை 100 ஆண்டு தவணைகளில் திருப்பிக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அரசாங்கம் 40 ஆண்டுகளில் திருப்பி கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களும் அதற்கு ஒப்புக்கொண்டார்கள். அப்படியிருந்தும் காலதாமதத்திற்கு காரணம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பஞ்சாயத்தாக இருக்கும் போது 100 ஆண்டுத் தவணையிலேதான் கடன் கொடுக்கவேண்டுமென்றார்கள். முனிசிபாலிடியான பிறகு வேண்டுமென்றால் 40 ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கலாம் என்றார்கள். ஆகவே, முனிசிபாலிடியான பிறகு கொடுக்கலாம் என்று உத்தேசம்.